



# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண் : 34

## அறிவிப்புகள்
## 2023 – 2024

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மானியக் கோரிக்கை எண் : 34

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**கே.என். நேரு**
நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கான அறிவிப்புகள்

## 53. குடிநீர் விநியோகத்தை கண்காணிக்க மைய கண்காணிப்பு முறை அமைத்தல் (Centralised Monitoring System)

உயிர் நீர் இயக்கத்தின் (Jal Jeevan Mission) கீழ், செயலாக்கத்தில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களில், குடிநீர் அளவுமானிகள் பொருத்தி, குடிநீர் விநியோகத்தை நேரடியாகக் கண்காணிக்க, வாரிய தலைமை அலுவலகத்தில் மைய கண்காணிப்பு முறை அமைக்கப்படும்.



## 54. செயல்திறன் குறைந்த மின்னிறைப் பான்களை (pumpsets) ஆற்றல் திறன் உள்ள புதிய மின்னிறைப்பான்களாக மாற்றி அமைத்தல்

வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் 15 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வரும் செயல்திறன் குறைந்த 100 குதிரைத்திறன் மற்றும் அதற்கு மேலுள்ள மின்னிறைப்பான்களை (Pumpsets) படிப்படியாக ஆற்றல் திறன் உள்ள புதிய மின்னிறைப்பான்களாக (Energy efficient pumpsets) மாற்றி/ புனரமைப்பு செய்து, வடிவமைக்கப்பட்ட அளவு குடிநீர் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 55. குடிநீர் அளவுமானிகள் (bulk water meters) பொருத்தி, இணைய வழி செயல் திறன் (Internet of Things) மூலம் கண்காணித்தல்

வாரியத்தால் குடிநீர் வழங்கப்படும் ஊரக மற்றும் நகர தரைமட்ட தொட்டிகளில் குடிநீர் அளவுமானிகள் பொருத்தி, இணைய வழி செயல் திறன் (Internet of Things) மூலம் குடிநீர் அளவு கண்காணிக்கப்படும்.



## 56. குடிநீர் மாதிரிகளை பரிசோதித்தல்

பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதலை உறுதி செய்யும் பொருட்டு 7.00 இலட்சம் குடிநீர் மாதிரிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பரிசோதனை செய்யப்படும்.

## 57. கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கான குடிநீர் திட்டங்கள்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் தாளக்கரை ஊராட்சியில், 14 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 9.70 கோடி மதிப்பீட்டிலும், கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தேவியகரம் ஊராட்சிக்கு ரூபாய் 3.75 கோடி மதிப்பீட்டிலும், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 8 ஊராட்சிகளுக்கு ரூபாய் 19.20 கோடி மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம் தெரிசனங்கோப்பு அருகில் பழையாற்றை நீராதாரமாகக் கொண்டு கடுக்கரை ஊராட்சி, திடல் ஊராட்சி மற்றும் காட்டுப்புதூர் ஊராட்சிகளுக்கு ரூபாய் 9.50 கோடி மதிப்பீட்டிலும் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



## 58. ஈரோடு மாவட்டம், அந்தியூர் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கு சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.

ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்துவது குறித்த சாத்தியக்கூறுகள் ஆராயப்படும்.